**செய்தி வெளியீடு எண்: 043** **நாள்:12.05.2021**

# <u>செய்தி வெளியீடு</u>

தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவதை முன்னிட்டு, அதைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்க 13–5–2021 அன்று மாலை 5–00 மணியளவில், தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10–வது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில், “அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம்” மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களது தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார். மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் ஒவ்வொரு சட்டமன்றக் கட்சியின் சார்பாக இரண்டு பிரதிநிதிகள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**